Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 58/2023 PW-2**

Name : மணிகண்டன்
Father / Husband name : கண்ணியப்பன்
Village : காட்டுசிவிறி
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.08.2025

A1, A2 absent. Petition u/s 317 CrPC fied and allowed. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 பூங்காவனம் எனது ஊரைசேர்ந்தவர். சாட்சிகள் ஏழுமலை, பாண்டியன், திருநாவுக்கரசு ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரிகளை சம்பவ சமயத்தில் பார்த்து பின்னர் பெயர் தெரிந்துகொண்டேன். கடந்த 15.08.2022 அன்று இரவு 08.30 மணியளவில் கொள்ளாறு கிராமத்தில் காட்டுச்சிவிறிக்கு செல்லும் திருப்பத்தில் அ.சா.1 வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்லும்போது வழிவிடவில்லை என்று இரண்டு நபர்கள் தாக்கிவிட்டதாக கேள்விபட்டு நானும் பாண்டியனும் சென்று பார்த்தபோது அ.சா.1ன் சட்டை கிழிந்த நிலையில் கீழே கிடந்தார். நாங்கள் அவரை எழுப்பி கேட்டபோது அவர் வரும்போது பிரபு, டேவிட் என்பவர்கள் வழிமறித்து அடித்துவிட்டதாக கூறினார். பின்னர் அ.சா.1 வீட்டிற்கு அழைத்துசென்றுவிட்டு திண்டிவனம் அரசு மருத்துவமனையில் அழைத்துசென்றோம். அ.சா.1க்கு பிபி, சுகர் அதிகமாகி மயக்கம் வருவதுபோல் ஆனது. அ.சா.1 ன் முகம் வீங்கியிருந்தது. போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பகுதியளவு பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது மேற்சொன்ன தேதி நேரம் இடத்தில் அசா.1 சென்றுகொண்டிருந்தபோது எதிரிகள் அ.சா.1 ஐ வழிமறித்து தகாத வார்த்தையால் திட்டி கையால் அடித்து, கால்களால் எட்டி உதைத்தும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்த நான் சண்டையை விளக்கிவிட்டோம் என்றும் போலிசார் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் யார் கொடுத்த புகாருக்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் பூங்காவனம். அவர் எனது உறவினரா என்றால் இல்லை, ஊர்க்காரர். நான் பார்க்கும்போது எதிரிகள் சம்பவயிடத்தில் இருந்தார்களா என்றால் இல்லை, கூட்டமாக இருந்தது. போலிசார் கையொப்பம் செய்ய காவல் நிலையம் வரச்சொன்னார்களா என்றால் இல்லை. முதல் முறையாக நீதிமன்றத்தில் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சம்பவயிடம் செல்லாமல், போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அ.சா.1 ஐ நான் தான் மருத்துவமனைக்கு அழைத்துசென்றேன். சம்பவயிடம் செஞ்சி - திண்டிவனம் நெடுஞ்சாலை ரோடு என்றால் சரிதான். நான் பார்க்கும்போது அந்த சாலையில் இருபுறமும் வண்டிகள் நின்றிருந்ததா என்றால் இல்லை. அ.சா.1க்கு சட்டை கிழிந்திருந்தது மற்றும் முகம் வீங்கியிருந்தது என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. மேற்படி காயம் எதிரிகள் தாக்கியதால் ஏற்படவில்லை, அ.சா1க்கு பிபி, சுகர் என்பதால் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/ M.Elavarasi,

Judicial Magistrate No.I, Tindivanam

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 58/2023 PW-3**

Name : பாண்டியன்
Father / Husband name : முத்து
Village : காட்டுசிவிறி
Age : 28
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.08.2025

A1, A2 absent. Petition u/s 317 CrPC fied and allowed. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 பூங்காவனம் எனது ஊரைசேர்ந்தவர். அ.சா.2 மணிகண்டன் என்பவரை தெரியும். சாட்சிகள் ஏழுமலை, திருநாவுக்கரசு ஆகியோர்களை எனக்கு தெரியும். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. 15.08.2022 அன்று இரவு 08.30 மணியளவில் நானும் அ.சா.2 ம் கொள்ளாறிலிருந்து எங்கள் ஊருக்கு திரும்பும் இடத்தில் அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் இடையிலான சண்டையை ஏழுமலை, திருநாவுக்கரசு மறித்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அ.சா1 ஐ அழைத்துக்கொண்டு அவரின் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அசா.1 முகத்தில் வீங்கி இருந்ததால் அவரின் மகன் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார். எதற்காக சண்டை போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. அ.சா.1 ன் முகத்தில் எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது, நாங்கள் செல்லும்போது அவரின் முகத்தில் வீக்கம் இருந்தது. போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் யார் புகார் கொடுத்தார் என்றால் தெரியாது. எதிரிகளின் பெயர் சம்பத்திற்கு முன்னர் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்திற்கு பின்னர் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் திருநாவுக்கரசு சொன்னார். திருநாவுக்கரசு எனது

ஊக்காரரா என்றால் இல்லை, கொள்ளாரை சேர்ந்தவர். நான் வழக்கமாக எத்தனை மணிக்கு வேலை சென்றுவிட்டு திரும்புவேன் என்றால் காலை 8 மணிக்கு சென்று இரவு 8 மணிக்கு வருவேன். சம்பவம் நடந்த அன்று எத்தனை மணிக்கு வேலைக்கு சென்றேன் என்றால் வேம்பூண்டிக்கு காலை 8 மணிக்கு வேலைக்கு சென்று இரவு 7 மணிவரை எடைமிசன் அருகே பூசணிக்காய் இறக்க இருந்தேன். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, போலிசார் கேட்டதால் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது ஊரை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/ M.Elavarasi,

Judicial Magistrate No.I, Tindivanam